Madras Museum

* 7 Q.—Thiru SAW. GANESAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the present stage of the scheme of establishing a separate museum for displaying the exhibits of Department of Sculpture and Department of Archaeology now attached to the Madras Museum; and

(*b*) how long it will take for the successful implementation of this scheme?

சென்னை மியூசியம்

திரு. சா. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மியூசியத்தில் உள்ள சிற்பத் துறை, பழம்பொருள் துறை ஆகியவற்றை பிறவற்றிலிருந்து வேறுபடுத்தித் தனிக் காட்சிக் கூடமாக அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

(இ) இந்த முயற்சி பயன் பெற்றுச் செயல்பட எத்துணை காலம் ஆகும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சென்னை அருங்காட்சியகத்திலுள்ள சிற்பத்துறை பழம்பொருள் துறைகளை மற்றத் துறைகளிடமிருந்து வேறுபடுத்தும் திட்டம் ஏதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, பல முறை இந்தச் சபையிலே நான் கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களும் அந்த மாதிரியான ஏற்பாடு அவசியம் என்ற நிலையை ஏற்றுக்கொண்டு பதிலும் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருக்க, இப்பொழுது வரலாற்றுத் துறை வளர்ந்து வருகின்ற இக் காலத்தில், அந்தத் துறையைப் பிரித்து, அதைச் செம்மைப் படுத்துவதற்கு திட்டமில்லாமலிருப்பது பொருந்துமா? இனியாவது அந்த வகையில் பிரித்து வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலில் தனிக்கூடமாக, அருங்காட்சியகமாக அமைக்கலாமா என்ற ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அது அருங்காட்சி இயக்குநர் அவர்களுடைய கருத்துக்கிணங்க கைவிடப்பட்டது. மறுபடியும் இப்பொழுது வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் பொருட்டு சிற்பங்கள், சிலைகள், சித்திரம், கைவேலைப் பொருள்களைக் கொண்ட ஒரு அருங்காட்சியகம் அமைக்கலாம் என்று இயக்குநர் பரிந்

துரை செய்துள்ளார். அதற்கு அரசாங்கம் ஒப்புதல் தந்தால் கருத்துரு ஒன்றை அனுப்புவதாகக் கூறியுள்ளார். அந்த அடிப்படையில் தனியாக அமைக்கலாமா என்பது அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இந்த அருங்காட்சியகம் உயிர் போன பிராணிகளையும் ஒன்றாக வைத்து, அதை நடத்துகின்ற இயக்குநர் உயிர் கலையிலே மட்டும் பயிற்சி பெற்றவராக இருப்பதால், சிற்பம், கலைத்துறையில் போதிய அக்கறை இல்லாமல் இருப்பதன் காரணத்தால், தனிப்படுத்துவதில் போதிய அக்கறை காட்டாமல் தனி அமைப்பு வேண்டும் என்ற நிலையை மறுத்தார் என்று பின்னால் இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து பரிந்துரை செய்திருப்பதாகவும் அறிகிறேன். "அரசு அனுமதித்தால்" என்று அமைச்சர் அவர்களே சொல்ல வேண்டாம். அரசு அனுமதித்து அதைச் செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டதற்குக் காரணம் நமது நாட்டிலிருக்கின்ற பிற அருங்காட்சியகங்களும் வெளிநாட்டிலுள்ள அருங்காட்சியகங்களும் பல்வேறு துறைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. புதைப்பொருள், சிற்பம், சிலை, மக்கள் நாகரீகம், புவியியல், தாவர இயல், விலங்கியல் போன்ற பிரிவுகள் அடங்கியதாக விளங்குகின்றன. அந்த முறையில்தான் கருத்து வழங்கப்பட்டது. இப்பொழுது தனியாக, அதற்கு உட்பட்ட அருங்காட்சியகமாக, சிற்பங்கள், சிலைகள், சித்திரங்கள், கைவேலைப்பொருள்கள் ஆகியவற்றை மட்டும் பிரித்து வைப்பதற்கு முயற்சி மேற்கொள்கின்ற அளவுக்கு அரசு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த அளவுக்கு நிறைவேற்ற அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Art Gallery, Thanjavur

*8 Q.—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to take over the Art Gallery, Thanjavur under the direct control of the Government of Tamil Nadu, i.e., under the administrative control of Archaeological Department; and

(b) if so, the time within which the transfer will take place?